**செய்தி வெளியீடு எண்: 148** **நாள்: 20.02.2020**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 19.2.2020 அன்று தலைமைச் செயலகத்தில், பொதுத் துறை சார்பில் சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் அமைந்துள்ள புதிய அரசு விருந்தினர் இல்லத்தில் 10 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள நவீன உடற்பயிற்சிக் கூடத்தை திறந்து வைத்தார்கள்.

பல்வேறு மாநிலங்களிலிருந்து சென்னைக்கு வருகை புரியும் அரசு விருந்தினர்கள், மக்கள் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் ஆகியோர் தங்குவதற்கு ஏதுவாக, சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் அமைந்துள்ள புதிய அரசு விருந்தினர் இல்லத்தில் புதிதாக 10 லட்சம் ரூபாய் செலவில் உடற்பயிற்சிக் கூடம் ஒன்று அமைக்கப்படும் என்று கடந்த 2019–2020ஆம் ஆண்டு பொதுத் துறை மானியக் கோரிக்கையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

அதன்படி, சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் அமைந்துள்ள புதிய அரசு விருந்தினர் இல்லத்தில் பல்வேறு உடற்பயிற்சி உபகரணங்களுடன் 10 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள உடற்பயிற்சிக் கூடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., பொதுத் துறை முதன்மைச் செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) முனைவர் ப. செந்தில் குமார், இ.ஆ.ப., பொதுத் துறை (மரபு) கூடுதல் செயலாளர் திரு. ஆ.ர. ராகுல் நாத், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 20.2.2020**